Kanton Zürich
Bildungsdirektion
**Volksschulamt**
Besondere Förderung
Sektor Interkulturelle Pädagogik

Kontakt: Walchestrasse 21, 8090 Zürich
Telefon 043 259 53 61, ikp@vsa.zh.ch
8. März 2022


**பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளுடன் வரும் புதிய குடியிருப்பாளர்கள்**

சூரிச் நகரத்திற்கு வரும் பாடசாலை செல்லும் வயதுடைய அனைத்து சிறுவர்களுக்கும் இளம் வயதினர்களுக்கும் பாடசாலைக்குச் செல்ல உரிமையும் கடமையும் உண்டு. இது வதிவிட நிலைமையில் தங்கியில்லாமல் குடியிருக்க ஆரம்பித்த தொடக்கத்திலிருந்தே பொருந்தும். கட்டாயப்பாடசாலையானது மழலையர் பாடசாலையையும் உள்ளடக்குகின்றது.

**கட்டாயக்கல்வி**

கட்டாயக்கல்வியானது பொதுவாக பதினொரு வருடங்கள் அல்லது கட்டாயப்பாடசாலையை முடிக்கும் வரையாகும். இதனை அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையிலும் கற்றுப்பூர்த்தி செய்ய முடியும்.

ஒரு வருடத்தின் ஆடி மாதம் 31ம் திகதிக்கு முன்பு ஒரு பிள்ளை நான்கு வயது நிரம்பியதாக இருப்பின் அப்பிள்ளை அடுத்து வருகின்ற பள்ளியாண்டில் கட்டாயக்கல்வியான பாலர்பாடசாலைக்கு செல்லுதல் வேண்டும். பதினாறு வயது நிரம்பிய இளம் வயதினர் கட்டாயக்கல்வியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இருப்பினும் அவர்கள் பள்ளியாண்டை முடிப்பதற்கு உரிமையுண்டு.

நாம் அரச கட்டாயப்பாடசாலையை தேர்ந்தெடுக்க முடியாது: அதாவது பிள்ளை அது வசிக்கும் இடத்திலுள்ள பாடசாலைக்கு செல்ல வேண்டும். உள்ளூர் பாடசாலை நிர்வாகமே (உயர்நிர்வாகம் Schulpflege) பாடசாலையினை தேர்வு செய்யும். பெற்றோர்களுக்கு தனியார்பாடசாலையை தேர்வு செய்ய அனுமதியுண்டு. தனியார்பாடசாலைக்கான செலவையும் பெற்றோரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**பிள்ளைகளை பதிவு செய்தல்**

உங்கள் பிள்ளை புதிதாக சூரிச் மாநிலத்திற்கு குடியேற இருந்தால் பெற்றோர் உடனடியாக உள்ளூர் பாடசாலை நிர்வாகத்தில் (உயர்நிர்வாகம-Schulpflege) பதிவு செய்தல் வேண்டும். இந்த கடமையானது பாடசாலை வயதுடைய சிறுவர் மற்றும் இளம் வயதினர்களுக்கு பொருந்தும்.

சூரிச் மாநிலத்தில் குடும்பத்தினர் குடியேறியதும் உடனடியாக உள்ளூர் பாடசாலை நிர்வாகத்தினை (உயர்நிர்வாகம்-Schulpflege) தொடர்பு கொண்டு பாடசாலையில் சேர்ப்பது தொடர்பான விபரங்களை வினாவி அறிதல் வேண்டும்.

உள்ளூர் பாடசாலை நிர்வாகத்தினது முகவரியினை கீழே காணலாம்:

- முழு சூரிச் மாநிலத்தில் ( Kanton Zürich)

  www.zh.ch/schulen

- சூரிச் நகரத்தில் (Stadt Zürich)

  https://www.stadt-zuerich.ch/ssd/de/index/volksschule/schulkreise_kreisschulbehoerden.html

உதாரணமாக

01.08.2019 முதல் 31.07.2020 வரை பிறந்தவராயின் பாடசாலை சேரும் கல்வியாண்டு 2024/25

01.08.2020 முதல் 31.07.2021 வரை பிறந்தவராயின் பாடசாலை சேரும் கல்வியாண்டு 2025/26

**பாடசாலைக்கு சேர்த்தல்**

பாடசாலை உயர்நிர்வாகம் (Schulpflege) பிள்ளைக்குரிய பாடசாலையை ஒதுக்குகிறது. பாடசாலை தலைமைநிர்வாகம் பிள்ளைக்கு பொருத்தமான வகுப்பினை ஒதுக்குவதற்கு பொறுப்பாகும். வகுப்பானது பிள்ளையின் வயதிற்கேற்ப அமையவேண்டும். ஒரு பிள்ளை டொச் மொழியே தெரியாமலோ அல்லது சிறிதளவு தெரிந்திருந்தாலோ அது சாதாரண வகுப்பிற்கு செல்வதுடன் மேலதிகமாக இரண்டாவது மொழியாக டொச் மொழி (DaZ) வகுப்பிற்கும் செல்லும். பிள்ளை சகமாணவர்களுடன் ஒருங்கிணைந்து வகுப்பு பாடங்களை கற்பதற்கு அப்பிள்ளையின் வழமையான வகுப்பாசிரியர் உதவுவார்.

சில மாநிலங்களில் „வரவேற்பு வகுப்புகள்“ (Aufnahmeklassen) என உள்ளன. இங்கு பொதுவாக பிள்ளைகள் ஆகக்கூடியது ஒரு வருடம் இருக்கலாம். இங்கு அவர்கள் டொச் மொழியை கற்று சாதாரண வகுப்பிற்கு செல்ல தயாராகுவார்கள்.

**வேலைக்கு தயாராகுதல்**

இளைஞர் மற்றும் தொழில்சார் ஆலோசனை வழங்கும் அலுவலகம் (Amt für Jugend und Berufsberatung) புதிதாக குடியேறும் டொச் மொழி தவிர்ந்த பிற மொழியை பேசும் பெற்றோருக்கு விசேடமாக ஆலோசனைகளும் தகவல்களும் வழங்குகின்றது. இச் சலுகையின் பெயர் „Integras“.

டொச் மொழி தவிர்ந்த பிற மொழியை பேசும் 15 தொடக்கம் 21 வயது வரையான புதிதாக குடியேறும் இளம் வயதினருக்கு தொழிட்கல்வியை தெரிவு செய்யும் பாடசாலைகள் விசேட „தொழிலிற்கு தயார்ப் படுத்துகின்ற மொழி மற்றும் ஒருங்கிணைப்பு ஆண்டினை“ (Berufsvorbereitungsjahr Sprache und Integration) வழங்குகின்றது. இளம் வயதினர் இந்த ஆண்டில் பொதுவாக டொச் மொழியினை கற்பார்கள். அதுமட்டமன்றி அவர்கள் மேல் நிலைப்பள்ளியில் சேரவோ அல்லது தொழில்பயிற்சியை தெரிவு செய்யவோ தேவையான அறிவையும் அங்கு பெற்றுக்கொள்கின்றார்கள்.

(Mittelschul- und Berufsbildungsamt) நடுநிலைப்பள்ளி மற்றும் தொழிற்பயிற்சி அலுவலகம் Brückenangebote ஐ வழங்குகின்றது. இவ் வகுப்பானது கட்டாயப்பாடசாலை முடிவுற்று முதலாவது தொழிற்கல்வியை தொடங்கவுள்ள கால இடைவெளியை குறைக்க உதவுகின்றது. அதாவது இவை செக்குண்டார் வகுப்பில் தொழிற்கல்வி (Lehrstelle) கிடைக்காத அல்லது தொழிலை தேர்வு செய்வதில் சிக்கலுள்ள இளைஞர்களை வழிப்படுத்துகின்றது.

**பெற்றோருக்கான மேலதிக தகவல்கள்**

- சூரிச் மாநில கட்டாயப்பாடசாலை மற்றும் சிறுவர்பாசாலை பற்றிய பெற்றோருக்கான தகவல்கள்
- டொச்மொழி இரண்டாவது மொழியாகவுள்ளவர்களுக்கான டொச் வகுப்பு

- டொச்மொழியை தாய்மொழியாகக் கொண்டிராதவர்களுக்கான அவர்களது தாய்மொழி தன்னார்வ வகுப்புகள்
- சூரிச் மாநில பாடசாலை கட்டாயப்பாடசாலையின் அமைப்பு
- புலம்பெயர்ந்தோருக்கான ஒருங்கிணைப்பு, கல்வி மற்றும் தொழில் தொடர்பான இணையங்களின் பட்டியல்